
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1098

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

100

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## சுயமரியாதை இயக்கம், புரட்சிகர இயக்கமே!

1931-ஆம் ஆண்டு, அக்டோபர் 3 மற்றும் 4 தேதிகளில், நாகை முதலாவது சுயமரியாதை மாநாடு எழுச்சியோடு நடைபெற்றது. நாகை ரயில் நிலையம் வந்திறங்கிய பெரியார், சௌந்தர பாண்டியனார் உள்ளிட்ட 150-க்கும் மேற்பட்டோருக்கு, பேண்டு வாத்தியங்கள் முழங்க ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திரண்டு வந்து வரவேற்பு அளித்தனர். தஞ்சையில் இருந்து வழிநெடுகிலும், பல ரயில் நிலையங்களில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிறகு, ஆறு குதிரைகள் பூட்டப்பட்ட ‘பீட்டன்’ வண்டியில் மாநாட்டுத் தலைவர் சௌந்தர பாண்டியனார் அழைத்துச் செல்லப்பட்டார். தெருவெங்கும் தோரணங்கள். ஒவ்வொரு கடையிலும் ஊர்வலத்தை நிறுத்தி மாலையிடுவதும் பானங்கள் விநியோகிப்பதுமாக இருந்தனர். கொள்கை விளக்கத் தட்டிகள் வழியெங்கும் தென்பட்டன. மாநாடு நடைபெற்ற ‘சமதர்ம’ பந்தலை இறுதியாக ஊர்வலம் காலை 11 மணிக்கு அடைந்தது.

கொட்டகையில் இடம் போதாமல், பின்பக்க தடுப்புகள் அகற்றப்பட்டு நூற்றுக்கணக்கானோர் பின் வரிசையில், வெயிலில் அமர்ந்து மாநாட்டை கவனித்தனர்.

மாநாடு தொடங்கும் முன்பாக அம்மைநாதன் என்பவர், சமதர்மப் பாடல்களைப் பாடினார். பின்னர், விசாலாட்சி அம்மையார் மாநாட்டைத் திறந்துவைத்து சொற்பொழிவாற்றினார். “பெரியோர்களே! நமது சுயமரியாதை இயக்கம் அநேகரின் கண்களுக்குப் புரட்சி இயக்கமாகக் காணப்படுகின்றது என்பதை, நான் அறியாமல் இல்லை. அந்தப்படி அது காணப்படுவதில் ஆச்சரியம் இருப்பதாக நான் கருதவுமில்லை. ஏனெனில், அளவு கண்டுபிடிக்க முடியாத காலம் முதற்கொண்டே மூர்க்கத்தனத்தாலும் சூழ்ச்சியாலும், அரசாங்கம், நீதி, பழக்கவழக்கம், அனுபோகம், ஆதிக்கம், ஒழுக்கம், மதம், சாஸ்திரம், தெய்வீகம், கடவுள் என்பனவற்றின் சக்திகளாலும், சாக்காலும் அடிமைப்படுத்தப் பட்டுக்கிடக்கும் ஒரு நாடோ, ஒரு பாலினமோ, ஒரு சமூகமோ, ஒரு வகுப்போ, அவ்வடிமைத் தன்மையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டுமானால், மேலே சொல்லப்பட்ட அத்தனை சக்திகளுக்கும் விரோதமான ஒரு முயற்சியைக் கைக்கொண்டு அல்லாமல் மற்றபடி வேறு எந்த சாதனத்தாலாவது விடுதலை அடையச் செய்ய முடியுமா என்பதைச் சற்று யோசித்துப்பாருங்கள்” என நாட்டு நிலை, வருண பேதங்கள், பெண்கள் நிலை குறித்தெல்லாம் விரிவாகப் பேசினார்.

பின்னர், எம்.கே.குப்புசாமி வரவேற்புரை ஆற்றினார். மதிய உணவுக்குப் பிறகு, மாலை 3 மணிக்கு மாநாடு தொடங்கியவுடன், சௌந்தர பாண்டியனார் தலைமை உரை நிகழ்த்தினார். “நம்முடைய பழக்க வழக்கங்களை எடுத்துக்கொண்டு பாருங்கள். மக்களின் வாழ்வில் மூட நம்பிக்கைகளாலும், மூடக் கொள்கைகளாலும் எவ்வளவு அநாவசியமானதும், அர்த்தமற்றதுமான செய்கைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட பழக்கவழக்கமென்ற வார்த்தைகளையே ஒழித்துவிடுங்கள் என்று நாம் சொல்லுகின்றோம். மதத்தின் பேராலும் கடவுளின் பேராலும் மக்கள் பணம் எந்தெந்த வழிகளில் எல்லாம் வீணாக்கப்படுகின்றன என்பதை, மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தப் பணத்தை ஏழைகள் படிக்க, அறிவை விருத்தி செய்ய, ஆஸ்பத்திரி கட்ட, கிணறு வெட்ட பயன்படுத்தினால் நம் தேசம் எவ்வளவோ முன்னேறும்” என்று மூடநம்பிக்கைகளில் இருந்து விடுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

பெரியார் பேசும்போது, “இந்தியாவுக்கு சுயராஜ்ஜியம் கிடைத்தாலும் அதில் எல்லா ஜாதியினருக்கும், எல்லா மதத்தினருக்கும் சரியான பிரநிதித்துவம் இருக்கக்கூடியதாய் இருந்தால்தான், இந்திய மக்களால் ஒப்புக்கொள்ளக்கூடியதாய் இருக்கும். இல்லாதவரை எதிர்க்க வேண்டியதாகும்” என்று அப்போதே எச்சரித்தார். இரண்டாவது நாளில் விருதுநகர் மாநாட்டின் தீர்மானங்கள் அப்படியே ஏற்கப்பட்டன.

**...கூட்டம் திரளும்**

## பிரதமர் மோடி பதில் சொல்லட்டும்!

உலகையே அதிர வைத்துள்ள எப்ஸ்டீன் கோப்புகளில், இந்திய பிரதமர் மோடியின் பெயர் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்காவைச் சேர்ந்த பாலியல் மற்றும் நிதித்துறை குற்றவாளி ஜெஃப்ரி எப்ஸ்டீன், விசாரணை ஆவணங்கள் வெளியாகி, அமெரிக்காவில் பெரும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. 2018-ஆம் ஆண்டில் அந்த ஆவணங்கள் வெளியான நிலையில், 2019-ஆம் ஆண்டில் அவர் மரணமடைந்தார். அவர் வழக்கு தொடர்பான ஆவணங்கள் அமெரிக்காவைத் தாண்டி உலகளாவிய அரசியல் மற்றும் நிர்வாக அமைப்புகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.

குறிப்பாக, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இஸ்ரேல் பயணம் குறித்து ஒரு மின்னஞ்சலில் (இ-மெயில்) குறிப்பிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த ஆவணங்களில், பிரதமர் நரேந்திர மோடியின் 2017-ஆம் ஆண்டு இஸ்ரேல் பயணம் குறித்த குறிப்பு இடம்பெற்றுள்ளது எனக் கூறப்படுகிறது. அந்த மின்னஞ்சலில், எப்ஸ்டின் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீவ் பேனன் ஆகியோருக்கு இடையிலான தொடர்புகள் குறித்துப் பேசப்பட்டுள்ளது. 2017-ஆம் ஆண்டு பிரதமர் மோடி இஸ்ரேலுக்கு மேற்கொண்ட அதிகாரப்பூர்வப் பயணம் பற்றியும், அப்போது ஸ்டீவ் பேனன் மூலம் சில சந்திப்புகளை எப்ஸ்டீன் ஒருங்கிணைக்க முயன்றது போன்ற குறிப்புகளும் அதில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதை முன்வைத்து, பிரதமர் மோடியை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன. ஆனால், மோடி மீதான புகார்களை மறுத்துள்ள மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம், “2017-ஆம் ஆண்டு ஜூலையில் பிரதமர் மோடியின் இஸ்ரேல் பயணத்தைத் தவிர, மின்னஞ்சலில் குறிப்புகள் எதுவும் இல்லை’ எனவும், “அவற்றைப் புறக்கணிக்க வேண்டும்” எனவும் கூறுகிறது.

‘மோடியின் பெயர் இடம்பெற்றுள்ளது தனிநபர் விவகாரம் அல்ல. நாட்டின் கண்ணியம் மற்றும் சர்வதேச நற்பெயர் தொடர்பான விஷயம். ஆகவே, பதில் சொல்லுங்க, மோடி’ என்ற எதிர்க்கட்சிகளின் நியாயமான குரல் கவனிக்கப்பட வேண்டும்.

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

100

**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




## கோடுகளின் அரசியல்

தி.மு.கழகம் தொடங்கப்பட்டபோது, தமிழ்நாட்டு மக்களின் எழுத்தறிவு விகிதம் 25 சதவிகிதத்துக்கும் குறைவான ஒன்றாக இருந்தது. பாமர மக்களின் உரிமைக் குரலை அரசியல் மொழியில் எடுத்துச்சொல்ல தி.மு.கழகம் பல்வேறு பிரச்சார யுக்திகளைக் கையாண்டது. குறிப்பாக, அரசியல் கருத்துகளை, விளிம்புநிலை மக்களிடம் கொண்டுசெல்ல, வெகுஜன ஊடகங்களைத் துணையாகக் கொண்டது. அப்படிக் கைக்கொண்ட நாடகம், மேடை பேச்சு, பத்திரிகைகள், சினிமா, மாநாடுகள் என்ற வரிசையில் கருத்துப்படங்களுக்கும் முக்கிய இடமுண்டு.

தேர்தல் அறிக்கையை அனைவருக்கும் புரியும் வண்ணம் ஓவியங்களாகவும், சித்திரங்களாகவும் வெளியிட்ட மரபு, தி.மு. கழகத்துக்கு மட்டுமே உரியது. அப்படியான கருத்துப்படங்கள் திராவிட இயக்கத்தின் முக்கிய பிரச்சாரக் களமாக விளங்கியதை ஆவணப்படுத்தும் நூல் ‘கார்டூனாயணம்’. இந் நூலை ஆய்வாளர்கள் எம்.எஸ்.எஸ்.பாண்டியன், வீ.எம்.எஸ்.சுபகுணராஜன் ஆகியோரும் ஓவியர் ட்ராட்ஸ்கி மருது அவர்களும் இணைந்து தொகுத்துள்ளனர். சிந்தனையைத் தூண்டும் பல்வேறு கருத்துப்படங்களுடன் அவை வெளியான வரலாற்றுப் பின்னணியையும் விளக்கும், 272 பக்கங்கள் கொண்ட இந்நூலை கயல்-கவின் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

நூலின் பதிப்பாசிரியர்கள் எழுதியுள்ள அறிமுகக் குறிப்பு, திராவிட இயக்கம் கருத்தோவியங்களை அரசியல் பரப்புரைக்காக எப்படியெல்லாம் பயன்படுத்தியது என்பதை கவனபடுத்துகிறது. இன்றைக்கு, ‘முரசொலி’ பாசறைப் பக்கத்தில் படக்கதை வடிவில் வெளியாகும் ‘திராவிடத்தால் வாழ்கிறோம்’ என்ற திராவிட இயக்க வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சிக்கு வித்தாக, 1968-இல் தி,மு.கழக வரலாற்றை, சித்திரக்கதை தொடராக முரசொலி வெளியிட்டது, முன்னோடி முயற்சியாக இருந்துள்ளதை, இந்நூல் மூலம் அறியமுடிகிறது. இந்தச் சித்திரக்கதை தொடராக வெளிவந்த ‘முரசொலி’ இதழ்களின் தொகுப்பு முழுமையாக கிடைக்காத காரணத்தால், இத்தொடர் தொடங்கிய நாளையும் முடிவடைந்த நாளையும் அறியமுடியவில்லை என்ற குறிப்பு ஆவணப்படுத்தலில் நமக்கிருக்கும் மெத்தனப்போக்கைக் கோடிட்டு காட்டுகிறது.

தி.மு.க. ஆதரவு இதழ்களில் வெளியான கேலிச் சித்திரங்கள் மட்டுமின்றி, ‘சுதேசமித்திரன்’, ‘ஆனந்த விகடன்’, ‘தி மெயில்’, ‘நவசக்தி’ போன்ற பத்திரிகைகளில் நம்மை மிக மோசமாக சித்தரித்துத் தீட்டப்பட்டு வெளியான படங்களும் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. அந்தக் காலத்தில் நாம் அரசியல் வெளியில் எவ்வாறு சித்தரிக்கப்பட்டோம் என்பதை, இதன் மூலம் அறியமுடிகிறது. இவ்வாறு வெளியான கேலிச் சித்திரங்களில் பேரறிஞர் அண்ணாவின் படங்களே பிரதானமாக இடம்பெற்றுள்ளன.

இப்படியான கேலிச்சித்திரங்கள் தேசிய சார்பு கொண்ட இதழ்களால் தொடர்ச்சியாக தீட்டப்பட்டு வந்த நிலையில், அதற்கு, திராவிட இயக்க இதழ்கள் எதிர்வினையாற்றி வந்தன. இதன் உச்சபட்ச வெளிப்பாடாக பேரறிஞர் அண்ணா, காஞ்சி பொங்கல் மலரில் ‘கார்டூனாயணம்’ எனும் தலைப்பில், காங்கிரஸ் அரசின் மீதான விமர்சனங்களாக தேசிய இதழ்கள் வெளியிட்ட கேலிச்சித்திரங்களைத் தொகுத்து எழுதியுள்ள கட்டுரையைக் கொள்ளலாம்.

அரசியல் நெடி தூக்கலாக, ‘சித்திரங்கள் பேசும்’ இந்நூல் பல தேடல்களை நமக்குள் விதைக்கும் வலுகொண்டது.

**...வாசிப்போம்.**

# ஃப்ளாஷ்பேக்



இரா.குணசேகரன்



## மின்சாரம் போல பாய்ந்த கழக உணர்வு!

2012-ஆம் ஆண்டு, கழகத்தின் அன்றைய பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள மதுரைக்கு வருகை தந்தார். காலையில், இளைஞர் அணி நிர்வாகிகள் நேர்காணல் நிகழ்ச்சியும், மாலையில் கழகப் பொதுக் கூட்டமும் நடைபெற்றன. இடைப்பட்ட நேரத்தில், அவர் தங்கியிருந்த, ‘சங்கம்’ ஓட்டலில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. நான் வணக்கம் தெரிவித்ததும், என் கரத்தைப் பற்றி, ‘நலமா?’ எனக் கேட்டார். தலைவரின் கரம் பற்றியதும் கழக உணர்வு மின்சாரம் போல பாய்ந்த உணர்வு கிடைத்தது. இந்தப் புகைப்படத்தை என் குடும்பப் படம் போல பாதுகாத்து வருகிறேன்.

**- இரா.குணசேகரன்,**
**பொறுப்புக் குழு உறுப்பினர், பெத்தானியாபுரம் பகுதி, மதுரை மேற்கு தொகுதி, மதுரை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# கருவூலம்

## ஓய்வறியா உழைப்பும் சிந்தனையும்!

1969-ஆம் ஆண்டு, பிப்ரவரி 3-ஆம் தேதி, தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா மறைந்தார். அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது, அங்கிருந்து முத்தமிழறிஞர் கலைஞருக்கு எழுதிய கடிதத்தில், ‘நோய் நீங்கும் - உயிர் பிழைத்து, இன்னும் பல ஆண்டு வாழ்வோம். அப்படி வாழும்போது முன்பு போல கடினமாக உழைக்க முடியுமா என்றுதான் கவலையாக இருக்கிறது’ என குறிப்பிட்டு இருந்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131